# ஓடி விளையாடு பாப்பா



ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு
தீங்கும் வர மாட்டாது பாப்பா.

சின்னஞ் சிறு குருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

*- சுப்பிரமணிய பாரதியார் -*

குறிப்பு:
* இப்பாடலை இசையோடு குழுவாகவும் தனித்தும் மாணவர் பாட வழிநடாத்தவும்.
* சிறு வினாக்கள் கேட்டு பாடலைக் கிரகிக்க வழிநடாத்தவும்.
* இதுபோன்ற வேறு பாடல்களையும் மாணவருக்கு அறிமுகம் செய்க.